# திருவிவிலிய ஞாயிறு - 28.09.2025

**இறைஇயேசுவில் அன்பிற்கினியவர்களே!**

நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் அன்பும் ஆசியும் உங்களோடு இருப்பதாக!

திருவிவிலியம் என்பது கடந்த காலத்தினின்று வரும் வார்த்தை மட்டுமல்ல; அது வாழும் காலத்திற்கும் எக்காலத்திற்கும் பொருந்துகின்ற உயிருள்ள வார்த்தை. வரலாற்றில் வாழும் மானிடரைக் காப்பதால் திருவிவிலியம் மானுடத்தின் வாழ்வு நூல். வாக்கு மனிதரான கிறிஸ்துவே (யோவா 1:14) இறைவெளிப்பாட்டின் முழுமை என்பதை இரண்டாம் வத்திக்கான் சங்கம் (இறைவெளிபாடு, 4) தெளிவுப்படுத்துகிறது. ‘‘மறைநூல் அனைத்தும் கடவுளின் தூண்டுதல் பெற்றுள்ளது. அது கற்பிப்பதற்கும் கண்டிப்பதற்கும் சீராக்குவதற்கும் நேர்மையாக வாழப் பயிற்றுவிப்பதற்கும் பயனுள்ளது’’ (2 திமொ 3:16). ஆகவேதான் ‘**நான் உமது வார்த்தையில் நம்பிக்கை கொள்கிறேன்**’ (திபா 119:74) எனும் கருப்பொருளை யூபிலி ஆண்டில் திருவிவிலிய வாரத்தைக் கொண்டாட திருஅவை நமக்கு வழங்கியுள்ளது.

**வாக்குறுதியின் நம்பிக்கை நூல்:-**

‘‘திருவிவிலியம் வெறும் புத்தகம் அல்ல; அது உயிரோடு வாழும் இறைவன் பேசும் வார்த்தை. அதில் நம்பிக்கை வைக்கும்போது நம் வாழ்க்கை முழுவதும் புதிய வெளிச்சம் பெறுகிறது’’ (ஆண்டவரின் அருள்வாக்கு, 7) என்கிறார் திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட். கடவுளின் வார்த்தையில் நம்பிக்கை கொண்ட மனிதர்களின் வாழ்வு மாற்றத்தை திருவிவிலியம் தெளிவுப்படுத்துகிறது. ‘‘உனக்கு ஆசி வழங்குவேன். உன் பெயரை நான் சிறப்புறச் செய்வேன்’’ (தொநூ 12:2) எனும் கடவுளின் வார்த்தையில் நம்பிக்கை கொண்டு பயணித்த முதுபெரும் தந்தை ஆபிரகாம் நம்பிக்கையின் தந்தையானார். இஸ்ரயேல் மக்களின் அடிமைநிலையைக் கண்டுணர்ந்த ஆண்டவர், மோசேயிடம் ‘‘நான் உன் வாயிலும் அவன் (ஆரோன்) வாயிலும் இருந்து கொண்டு நீங்கள் செய்ய வேண்டியவற்றை உங்களுக்கு அறிவுறுத்துவேன்’’ (விப 4:15) எனக்கூறி, விடுதலை வாழ்வுக்கான

விதையைப் பதித்தார். எதிர்ப்புகளைக் கண்டு அஞ்சினாலும், தயக்க உணர்வு ஆட்கொண்டாலும் ஆண்டவரின் வார்த்தையில் நம்பிக்கை கொண்டதால் இஸ்ரயேல் மக்களின் விடுதலை வாழ்வு சாத்தியமானது.

## நம்பிக்கையின் அடையாளங்கள்

“மறைநூல் கடவுளைப் பற்றிய உயிருள்ள உணர்வை நமக்குத் தருகின்றது” (இவெ 15). கடவுளின் வழியை விட்டுவிலகித் தங்கள் போக்கின்படி வாழ்ந்த மக்களிடம் கடவுளின் வார்த்தையை இடிமுழக்கம் செய்தனர் இறைவாக்கினர்கள். ஆண்டவரின் குரலுக்கு “இதோ நானிருக்கிறேன். அடியேனை அனுப்பும்” (எசா 6:8) என்ற இறைவாக்கினர் எசாயாவும், “என் சொற்களை உன் வாயில் வைத்துள்ளேன்” (எரே 1:9) எனும் வார்த்தையால் உறுதியடைந்த இறைவாக்கினர் எரேமியாவும் சமூகத் தீமைகளை எதிர்த்தனர்; தவறு இழைத்தவர்களை துணிவுடன் கண்டித்தனர். இவ்வாறு ஆண்டவரின் வார்த்தையில் மக்களை வலுப்படுத்தினர்.

மானுட விடுதலைக்காய் ஆண்டவர் இயேசுவை தன் வயிற்றில் சுமந்த மரியா, “நான் ஆண்டவரின் அடிமை; உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்.” (லூக் 1:38) என்று ஆண்டவரின் வார்த்தையில் நம்பிக்கையை வேரூன்றினார். இயேசுவின் பணிவாழ்வில் உடன்பயணித்து நம்பிக்கையின் அன்னையானார்.

## திருஅவையில் இறைவார்த்தை

“உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்” (மாற் 16:15) என்ற இயேசுவின் வார்த்தையில் நம்பிக்கைப் பதித்த திருத்தூதர்கள் தங்கள் நற்செய்திப் பணியால் திருஅவையை ஆண்டவரில் கட்டியெழுப்பினர். பல சவால்களையும் துயரங்களையும் கடந்துச் செல்ல இறைவார்த்தை அவர்களுக்குத் திடமூட்டியது. “இறைவார்த்தை ஆற்றல் வாய்ந்த விதை. அதை மனதில் விதைத்தால் வாழ்க்கையில் புயல்கள் வந்தாலும் நம்பிக்கை வேரூன்றி நிற்கும்” (நற்செய்தியின் மகிழ்ச்சி, 11) என்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் கூரிய சிந்தனை நம் உள்ளத்திற்கு உறுதியூட்டுகிறது. இன்று திருஅவைப் பயணத்திலும் ஆண்டவரின் வார்த்தைதான் யாவருக்கும் நம்பிக்கை ஊட்டுகிறது. சமூக

ஒடுக்குதலையும் கடந்து இயேசுவின் வார்த்தையில் நம்பிக்கை கொண்ட நம் மண்ணின் மறைசாட்சி புனித தேவசகாயம் போன்ற பல புனிதர்களின் வாழ்வுச் செயல்கள் நம் நம்பிக்கை வாழ்வின் அடிக்கற்களே.

"திருவிவிலியம் வாசிப்பது கடவுளோடு நேரடி சந்திப்பு. அதன் வார்த்தையில் நம்பிக்கை வைப்பது கிறிஸ்துவை உயிருடன் சந்திக்கிறோம் என்பதற்கு சமம்" (உண்மையின் மாட்சி, எண் 56) என்கிறார் புனித திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல். எனவே இறைவார்த்தை வழியாக இயேசுவை சந்திக்கும் நம் வாழ்வில் சொல்லற்கரிய மாற்றங்கள் ஏற்பட வேண்டும். இயேசுவின் பார்வையில் சமூகத்தை உற்றுநோக்கவும், அவரது இலட்சிய முதன்மைகளை நமதானதாக மாற்றுவதற்கும் அவரது வார்த்தை நமக்கு வலுவூட்டுகிறது; நம்பிக்கை அளிக்கிறது. "இறைவார்த்தையில் நம்பிக்கை வைப்பது என்பது கடவுளின் வெளிப்பாட்டை முழுமனதுடன் ஏற்றுக்கொண்டு கிறிஸ்துவை முழுமையாய் பின்பற்றி, தூயஆவியாரின் துணையுடன் நம் வாழ்வை மாற்றி கொள்வதே" (இவெ, 5) என்ற இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் படிப்பினையை உள்வாங்க வேண்டும். சிறப்பாக யூபிலி ஆண்டில் எதிர்நோக்கற்று துவண்டு போயிருக்கும் கடைநிலையினரின் உள்ளங்கள் ஆண்டவரின் அருள்வாக்கால் நம்பிக்கை ஒளிபெற வேண்டும். குறிப்பாக நோயாளர், முதியோர், கைவிடப்பட்டோர், மாற்றுத்திறனாளிகள், சிறைவாசிகள், போர் வன்முறைகளால் பாதிக்கப்பட்டோர் போன்றோர் ஆண்டவரில் நம்பிக்கை கொள்ள நற்செயல்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இக்காலச் சூழலில் மனிதத்தைக் காயப்படுத்தும் காரணிகளுக்கெதிராகக் குரல் கொடுத்து முழுமனித விடுதலைக்காக ஈடுபாட்டுணர்வுடன் செயல்பட இறைவார்த்தையில் நம்பிக்கை வைப்பது காலத்தின் கட்டாயம். நம்பிக்கை தளர்ச்சியுறும்போது, நம்பிக்கையின்மை மேகம் நம்மைச் சூழ்ந்து வரும்போது வலுவூட்டும் இறைவார்த்தையில் நம் நம்பிக்கையை நங்கூரமிடுவோம்.

### திருவிவிலியப்பணியில் நம் மறைமாவட்டம்

✠ நமது மறைமாவட்ட திருவிவிலியப் பணிக்குழு முன்னெடுக்கும் அனைத்துப் பணிகளிலும் ஆர்வத்தோடு இணைந்து கொள்வோம்.

- ✠ யூபிலி ஆண்டை முன்னிட்டு ‘ஆளுக்கொரு திருவிவிலியம்’ என்ற நோக்கோடு திருவிவிலியப் பணிக்குழு முன்னெடுக்கும் சலுகை விலையிலான பொது மொழிபெயர்ப்பு (திருத்தியப்பதிப்பு) கத்தோலிக்கப் பதிப்பு திருவிவிலியம் அனைவரையும் சென்றடைய உதவுவோம்.
- ✠ பணிக்குழு முன்னெடுக்கும் திருவிவிலியச் சான்றிதழ் கல்வியிலும், திருவிவிலிய தொடர் வினாடிவினா நிகழ்வுகளிலும் பங்கெடுப்போம்.
- ✠ திருவிவிலியப் பணிக்குழுவை நம் பங்குகளில் உருவாக்க முன்வருவோம். சிறியோர் முதல் பெரியோர் வரை எல்லாரும் இறைவார்த்தையைக் கற்றுக்கொள்ளும் ஆர்வத்தை உருவாக்குவோம்.
- ✠ இம்மாதம் 22 முதல் 27 வரையிலான திருவிவிலிய வார திருவழிபாட்டை நன்குத் திட்டமிட்டு பொருளுணர்ந்து கொண்டாடுவோம்.
- ✠ திருவிவிலிய ஞாயிறு (28.09.2025) அன்று திருவிவிலியத்தை மையப்படுத்திய சிறப்பு கருத்தரங்குகள், பயிற்சிகள், கலை நிகழ்வுகளைப் பங்குகளில் ஏற்பாடு செய்வோம்.

வாக்கு மனிதரான இறைவனின் அருளும், வார்த்தையாம் இறைவனைச் சுமந்த அன்னை மரியாவின் பரிந்துரையும் என்றும் உங்களோடு இருப்பதாக.

*கிறிஸ்துவின் மனநிலையில்,*

Sd/-

**ஆயர் நசரேன் சூசை**

கோட்டாறு மறைமாவட்டம்

---

**குறிப்பு :** திருவிவிலிய ஞாயிறு சிறப்புக் காணிக்கை பிரிக்கப்பட்டு மறைமாவட்ட நிதி நிர்வாகியிடம் செலுத்தவும். இச்சுற்றுமடல் 21.09.2025 ஞாயிறு திருப்பலியின்போது மறைமாவட்டத்தின் அனைத்து ஆலயங்களிலும், துறவற இல்லங்களிலும் வாசிக்கப்பட வேண்டும்.